# இந்தியத் துணைத் தூதரகம்
# யாழ்ப்பாணம்

***

## ஊடக அறிக்கை

யாழ் இந்தியத் துணைத் தூதரகம், இன்று (ஜனவரி 26, 2021) காலை இந்தியாவின் 72-வது குடியரசு நாளைக் கொண்டாடியது. இந்தியத் துணைத்தூதுவர் பாலச்சந்திரன் அவர்கள் இந்தியக் கொடியேற்றி வைத்து, இந்திய குடியரசு தலைவரின் செய்தியை வாசித்தார். நிகழ்ச்சியில், தூதரகத்தின் இந்தியா கார்னர் இசை வகுப்பின் மாணவர்கள், ஆசிரியை திருமதி வாசஸ்பதி அவர்கள் தலைமையிலும், எல்லைப் பாதுகாப்புப் படையின் ஒரு வீரரும் நாட்டுப்பற்று பாடல்களைப் பாடினர். இந்த விழாவில் துணைத் தூதரக அலுவலர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள், இந்திய குடிமக்கள், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள், இந்தியாவின் நண்பர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உட்பட 100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். உள்ளூர் கோவிட்-19 சுகாதார வழிகாட்டுதல்களை மதித்து இந்த விழா கொண்டாடப்பட்டது. முன்னதாக, இன்று காலை இந்தியத் துணைத் தூதுவர் பலாலியில் அமைந்துள்ள இந்திய அமைதிப்படையின் நினைவாலயத்தில் யாழ் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவுடன் இணைந்து மலர் அஞ்சலி செலுத்தினார்.

2. நிகழ்வின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

26 ஜனவரி 2021
யாழ்ப்பாணம்

****